# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## மேல்நிலை முதலாம் ஆண்டு - தமிழ்

## பொதுத் தேர்வு - முக்கிய வினாக்கள்

## இயல் ஒன்று

**குறுவினா**

1. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
2. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

**சிறுவினா**

1."என்னுயிர் தமிழ் மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.

**நெடுவினா**

1. தமிழர் வாழ் வோடும் புலம் பெயர் நிகழ்வு களோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**கலைச் சொல் அறிவோம் :**

அழகியல் - Aesthetics
இதழாளர் - Journalist
கலை விமர்சகர் - Art Critic
புத்தக மதிப்புரை - Book Review
புலம்பெயர்தல் - Migration
மெய்யியலாளர் - Philosopher

*ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.*

சு. வில்வரத்தினம்

தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை.

– இரசூல் கம்சதோவ்

மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக்கொள்கின்றன.

– எர்னஸ்ட் காசிரர்

**வால்ட் விட்மன்**

வால்ட் விட்மன் அமெரிக்காவைச் சேர்ந்தவர். கவிஞர்; இதழாளர்; கட்டுரையாளர்; புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர். இவருடைய 'புல்லின் இதழ்கள்' (Leaves of grass) என்ற நூல் உலகப்புகழ் பெற்றது.

**நூல்வெளி**

இராசேந்திரன் என்னும் இயற்பெயர் கொண்ட இந்திரன் சிறந்த கலைவிமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். ஒரிய மொழிக் கவிஞர் மனோரமா பிஸ்வாஸின் "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" என்னும் நூலின் மொழிபெயர்ப்பு நூலுக்காக, 2011ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் விருது பெற்றுள்ளார். முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள் உள்ளிட்ட கவிதை நூல்களையும் தமிழ் அழகியல், நவீன ஓவியம் உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார். வெளிச்சம், நுண்கலை ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.

**பாடப்பகுதிக்கான கவிதை மொழிபெயர்ப்புகள்**

- வால்ட் விட்மன் – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சங்கர் ஜெயராமன்
- மல்லார்மே – பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் : வெ. ஸ்ரீராம்
- பாப்லோ நெருடா – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : ஆ.இரா. வேங்கடாசலபதி

*4. ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனொடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.** நூ. எண்: 47

*5. காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.** நூ. எண்: 48

**புணர்ச்சிவிதி**

**அணிந்துரை – அணிந்து + உரை**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் – அணிந்த் + உரை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – அணிந்துரை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

நூல்வெளி

நன்னூல், தொல்காப்பியத்தை முதல்நூலாகக் கொண்ட வழிநூல் ஆகும். இது, பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும். இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என 5 பகுதிகளாகவும் சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என 5 பகுதிகளாகவும் அமைந்துள்ளன.

சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக்கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் எனப் பாயிரம் குறிப்பிடுகிறது.

ஈரோடு மாவட்டம், மேட்டுப்புதூர் என்ற ஊரில் எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரப்பிரபாவின் கோவில் உள்ளது. இங்கே பவணந்தியாரின் உருவச் சிற்பம் இன்றும் உள்ளது.

*2012ஆம் ஆண்டு தொடங்கி வரும் எல்லா வருடங்களிலும் ஜனவரி 14ஆம் நாள், தமிழர் பாரம்பரிய நாள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன்*

நூல்வெளி

எழுத்தாளர் அ. முத்துலிங்கம், இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கொக்குவில் கிராமத்தில் பிறந்தவர். பணி தொடர்பாகப் பல நாடுகளுக்குப் பயணித்திருக்கும் இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார். அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் உள்ளிட்ட பல சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றார். வம்சவிருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றவர். வடக்கு வீதி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999இல் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசையும் பெற்றிருக்கின்றார்.

**தமிழாக்கம் தருக.**

1. The Pen is mightier than the Sword.
2. Winners don't do different things, they do things differently.
3. A picture is worth a thousand words.
4. Work while you work and play while you play.
5. Knowledge rules the world.

## இயல் இரண்டு

### குறுவினா

1. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
2. அலர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### சிறுவினா

1. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை , முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
2. தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.

### நெடுவினா

1. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**மயங் கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக**

1. உலை, உளை , உழை (எ.கா)

மன **உளை**ச்சல் தீரவும் வீட்டில் **உலை** கொதிக்கவும் **உழை**க்க வேண்டும்.

**கலைச் சொல் அறிவோம்:**

இயற்கை வேளாண்மை - Organic Farming
வேதி உரங்கள் - Chemical Fertilizers
ஒட்டு விதை - Shell Seeds
தொழு உரம் - Farmyard Manure
மதிப்புக்கூட்டுப் பொருள் - Value Added Product
வேர்முடிச்சுகள் - Root Nodes
தூக்கணாங்குருவி - Weaver Bird அறுவடை - Harvesting



தெரியுமா?

பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன்மூலம் அதிக வருவாய் கிடைக்கும். இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர்.

"இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். அதேநேரம் எளிதில் சிதைந்துவிடும் வகையில் மென்மையானதும்கூட. நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால், பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும். விவசாயத்தின் வசந்தகாலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்"

– மசானபு ஃபுகோகா

*ஜப்பான் அறிஞர் மசானபு ஃபுகோகா. இவர் 1978ஆம் ஆண்டு, "ஒற்றை வைக்கோல் புரட்சி"*

**தெரியுமா?** மார்ச் 20 – உலகச் சிட்டுக்குருவிகள் நாள்.

நூல்வெளி

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டைச் சேர்ந்த அழகிய பெரியவனின் இயற்பெயர் அரவிந்தன். புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற படைப்புத்தளங்களில் இயங்குபவர். 'தகப்பன் கொடி' புதினத்திற்காக 2003ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர். அரசுப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். குறடு, நெரிக்கட்டு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் உனக்கும் எனக்குமான சொல், அருப நஞ்சு ஆகிய கவிதைத் தொகுப்புகளும் மீள்கோணம், பெருகும் வேட்கை உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இவரின் படைப்புகள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**மருதம் அகாடமி** Youtube channel

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

*சிறகிலிருந்து பிரிந்த*
*இறகு ஒன்று*
*காற்றின் தீராத பக்கங்களில்*
*ஒரு பறவையின் வாழ்வை*
*எழுதிச் செல்கிறது.**

*– பிரமிள்*

## புணர்ச்சி விதி

செங்கயல் – செம்மை + கயல்

ஈறு போதல் – செம் + கயல்
முன்னின்ற மெய் திரிதல் – செங்கயல்.

### தெரியுமா?



பள்ளு 96 வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது உழத்திப் பாட்டு எனவும் அழைக்கப்படும். தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சாரும்.

### திருமலை முருகன் பள்ளு கூறும்

#### மாடு வகைகள்

காரி, தொந்திக்காளை
மால்காளை, மறைகாளை
மயிலைக்காளை, மேழைக்காளை
செம்மறையான், கருமறையான்

#### உழவுக் கருவிகள்

கலப்பை, நுகம், பூட்டு,
வள்ளைக்கை, உழக்கோல், கொழு
கயமரம், மண்வெட்டி, வடம்

### சொற்சுவை

கண்காணி: பேச்சு வழக்கில் கங்காணி என்று பயன்படுத்தப்படுகிறது. கண்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல். கங்காணம் என்றும் வழங்கப்படுகிறது.

இதன் பொருள், நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவு என்பதாகும். கண்காணி என்பது இந்த ஒப்படியை மேற்பார்வை செய்பவரைக் குறிக்கும்.

## பகுபத உறுப்பிலக்கணம்

**அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ**

அலர் – பகுதி

த் – சந்தி, (ந் ஆனது விகாரம்)

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

### நூல்வெளி

ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல். திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது. ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்: குறிஞ்சித்திணை – கபிலர், முல்லைத்திணை – பேயனார், மருதத்திணை – ஓரம்போகியார், நெய்தல் திணை – அம்மூவனார், பாலைத்திணை – ஓதலாந்தையார். ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

பேயனார், சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

### தமிழாக்கம் தருக.

1. *Just living is not enough. One must have sunshine, freedom and a little flower – Hans Anderson*
2. *In nature, light creates the colour. In the picture, colour creates the light – Hans Hofmann*
3. *Look deep into nature and then you will understand everything better – Albert Einstein*
4. *Simplicity is nature's first step, and the last of art – Philip James Bailey*
5. *Roads were made for journeys not destinations – Confucius*

### மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

1. உலை, உளை, உழை 2. வலி, வளி, வழி 3. கலை, களை, கழை
4. கனை, கணை 5. குரை, குறை 6. பொரி, பொறி

(எ.கா.) உலை, உளை, உழை

மன உளைச்சல் தீரவும் வீட்டில் உலை கொதிக்கவும் உழைக்க வேண்டும்.

### நயம் பாராட்டுக

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!

வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!

கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

– கவிமணி

## இயல் மூன்று

### குறுவினா

1. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்ற தாகப் புறநானூறு கூறுகிறது?
2. "கோட்டை " என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
3. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

### சிறுவினா

1. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
2. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.
3. தீயினாற் சுட்ட புண் உள்ளா றும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு. - இக்குறட்பா வில் பயின்று வரும் அணியை விளக் குக.

### நெடுவினா

1. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.
2. 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

### கலைச் சொல் அறிவோம்:

| | |
|---|---|
| இனக்குழு - Ethnic Group | முன்னொட்டு - Prefix |
| புவிச்சூழல் - Earth Environment | பின்னொட்டு - Suffix |
| வேர்ச்சொல் அகராதி - Etymological Dictionary | |
| பண்பாட்டுக்கூறுகள் - Cultural Elements | |

### பகுபத உறுப்பிலக்கணம்

**வருகின்ற – வா (வரு) + கின்று + அ**

வா – பகுதி, வரு எனத் திரிந்தது விகாரம்
கின்று – நிகழ்கால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

### புணர்ச்சி விதி

**திருப்புகழ் – திரு + புகழ்**

இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்.
திருப்புகழ்

**உயர்ந்தோங்கும் – உயர்ந்து + ஓங்கும்**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் உயர்ந்த் + ஓங்கும்.
உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
உயர்ந்தோங்கும்.

நூல்வெளி

19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சென்னிகுளம் அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்து அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியமாகும். இப்பாடலின் மெட்டு அண்ணாமலையாராலேயே அமைக்கப்பட்டதாகும். தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால், காவடிச் சிந்தின் தந்தை என அழைக்கப்பட்டார்; 18 வயதிலேயே ஊற்றுமலைக்குச் சென்று அங்குக் குறுநிலத்தலைவராக இருந்த இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார். இவர், இந்நூல் தவிர வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

*அம்ம வாழி தோழி நம்மூர்ப்*
*பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ*
*தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்*
*நன்றுநன் றென்னும் மாக்களோடு*
*இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.** (146)

– வெள்ளிவீதியார்

திணை: குறிஞ்சித்திணை

துறை: தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப, தன் தமர் மறுப்பாரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கி, "தலைவன் வரைவை நமர் ஏற்றுக்கொண்டனர்; நீ கவலை ஒழிவாயாக" என்று தோழி கூறியது.

### பகுபத உறுப்பிலக்கணம்

**பிரிந்தோர் – பிரி + த்(ந்) + த் + ஓர்**

பிரி – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

**தண்டுடை – தண்டு + உடை**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்
தண்ட் + உடை
உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
தண்டுடை

நூல்வெளி

குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. கடவுள் வாழ்த்து நீங்கலாக, அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது. "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பித்து உரைக்கப்படுவது. உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல். ஆதலால் இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

வெள்ளிவீதியார் சங்ககாலப் பெண்புலவர்களுள் ஒருவர். சங்கத்தொகை நூல்களில் 13 பாடல்கள் இவரால் பாடப்பட்டவை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**மருதம் அகாடமி** Youtube channel

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

*உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்*
*அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்*
*தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!*
*துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்*
*புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;*
*அன்ன மாட்சி அனையர் ஆகித்*
*தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.* * (182)

—கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

துறை : பொருண்மொழிக்காஞ்சித் துறை

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

**புணர்ச்சி விதி**

**இயைவதாயினும் – இயைவது + ஆயினும்**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் – இயைவத் + ஆயினும்.

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – இயைவதாயினும்.

**புகழெனின் – புகழ் + எனின்**

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – புகழெனின்.

**நூல்வெளி**

புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது; புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும்; அகவற்பாக்களால் ஆனது. புறநானூற்றுப் பாடல்கள் சங்ககாலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.

**கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி:** பாண்டிய மன்னருள் பெருவழுதி என்னும் பெயரில் பலர் இருந்தனர். ஆயினும், அரிய பண்புகள் அனைத்தையும் தம் இளமைக்காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்கால மக்கள், இவரை இளம்பெருவழுதி என்று அழைத்தனர். கடற்பயணம் ஒன்றில் இறந்துபோனமையால் இவர், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார். இவரது பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும் பரிபாடலில் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | - | த், ட், | ற், | இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | - | கிறு, கின்று, | ஆநின்று | |
| எதிர்கால இடைநிலைகள் | - | ப், வ் | | |
| எதிர்மறை இடைநிலைகள் | - | ஆ, அல், | இல் | |

**தமிழாக்கம் தருக.**

1. Education is the most powerful weapon, which you can use to change the world.
2. Looking at beauty in the world is the first step of purifying the mind.
3. Culture does not make people. People make culture.
4. A people without the knowledge of their past history and culture is like a tree without roots.
5. A nation's culture resides in the hearts and in the soul of its people.

### அடக்கமுடைமை

1) *நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது.**

நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.

2) *யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

ஒருவர் எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்கவேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

3) *தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு.**

தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும்; நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது.

அணி : வேற்றுமை அணி

6) *மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கண் படின்.**

பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.

அணி : உவமை அணி

### துறவு

15) *யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்.**

ஒருவன், எந்தெந்தப் பொருள்களிடமிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ அந்தந்தப் பொருள்களால் வரும் துன்பத்தை அவன் அடைவதில்லை.

16) *பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு.**

பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

அணி : சொல் பின்வரும் நிலையணி

| பால் | அதிகாரம் | இயல் | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| அறம் | 38 | 4 | பாயிரவியல் 04, இல்லறவியல் 20, துறவறவியல் 13, ஊழியல் 01 |
| பொருள் | 70 | 3 | அரசு இயல் 25, அமைச்சு இயல் 32, ஒழிபியல் 13 |
| இன்பம் | 25 | 2 | களவியல் 07, கற்பியல் 18 |

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## இயல் நான்கு

### குறுவினா

1. கொழுஞ்சோறு - புணர்ச்சி விதி கூறுக.
2. உவமை, உருவகம் - வேறுபடுத்துக.

### சிறுவினா

1. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக
2. உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
3. பதிப்பித்தார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### நெடுவினா

1. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

**கலைச் சொல் அறிவோம்:**

கல்விக்குழு - Education Committee,

உள்கட்டமைப்பு - Infrastructure,

செம் மொழி - Classical Language

மூதாதையர் - Ancestor,

மதிப்புக்கல்வி - Value Education,

மன ஆற்றல் - Mental Abilities

**கல்வியின் சிறப்பு**

துணையாய் வருவது தூயநற் கல்வி – திருமந்திரம்.

கல்வி அழகே அழகு – நாலடியார்

இளமையில் கல் – ஔவையார்.

| | |
|---|---|
| கணக்காயர் | எழுத்தும் இலக்கியமும் உரிச்சொல்லும் (நிகண்டு) கணக்கும் கற்பிப்போர். |
| ஆசிரியர் | பிற்காலத்தில் ஐந்தாக விரிக்கப் பட்ட மூவகை இலக்கணத்தையும் அவற்றுக்கு எடுத்துக்காட்டான பேரிலக்கியங்களையும் கற்பிப்போர். |
| குரவர் | சமய நூலும் தத்துவ நூலும் கற்பிப்போர். |

தமிழர்கள் இன்று பரவலாக ஏற்றுக்கொண்டிருக்கும் பட்டிமண்டபம் என்ற கலைவடிவம் சமயத் துறையிலிருந்து தோன்றியது. பட்டிமண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று மணிமேகலையில் சுட்டப்படுகின்றது. 'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' என்று அந்நூல் பேசுகிறது.

'ரெவரெண்ட் பெல்' என்ற ஸ்காட்லாந்து பாதிரியார் தமிழகத் திண்ணைப் பள்ளிக் கல்விமுறையைக் கண்டு வியந்தார். இம்முறையில் அமைந்த ஒரு பள்ளியை ஸ்காட்லாந்தில் 'மெட்ராஸ் காலேஜ்' என்னும் பெயரில் நிறுவினார். அங்கு இக்கல்விமுறை மெட்ராஸ்சிஸ்டம்,பெல் சிஸ்டம் மற்றும் மானிடரி சிஸ்டம் என்றும் அழைக்கப்பட்டது.

**தமிழகத்தில் விடுதலைக்கு முன் கல்வி வளர்ச்சி**

| ஆண்டு | நிகழ்வு |
|---|---|
| 1826 | சென்னை ஆளுநர் சர். தாமஸ் மன்றோ ஆணைக்கிணங்கப் பொதுக்கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1835 | சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. இது இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இரண்டு மருத்துவக் கல்லூரிகளுள் ஒன்று. |
| 1854 | பொதுக்கல்வித் துறை நிறுவப்பட்டு முதல் பொதுக்கல்வி இயக்குநர் (DPI) நியமிக்கப்பட்டார். |
| 1857 | சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. |
| 1859 | 1794இல் தொடங்கப்பட்ட ஸ்கூல் ஆஃப் சர்வே என்ற நிறுவனம், 1859இல் கிண்டி பொறியியல் கல்லூரியாக வளர்ச்சி அடைந்தது. |
| 1910 | தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1911 | பள்ளியிறுதி வகுப்பு – மாநில அளவிலான பொதுத்தேர்வில் நடைமுறைக்கு வந்தது. |

1854ஆம் ஆண்டு சார்லஸ் வுட் தலைமையிலான குழுவின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு, தற்காலக் கல்வியும் தேர்வுமுறையும் உருவெடுத்தன. சார்லஸ் வுட்டின் அறிக்கை, 'இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்' என்று போற்றப்படுகிறது. கி.பி. 1882ஆம் ஆண்டு உருவான ஹண்டர் கல்விக்குழு சீருடை முறை, தாய்மொழிவழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது. மேலும், புதிய பள்ளிகளைத் தொடங்கி நடத்தும் பொறுப்பைத் தனியாருக்கும் வழங்கப் பரிந்துரைத்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**மருதம் அகாடமி** Youtube channel

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

இரா. மீனாட்சி, 1970களில் எழுதத் தொடங்கி நெருஞ்சி, சுடுபூக்கள், தீபாவளிப்பகல், மறு பயணம், வாசனைப்புல், உதயநகரிலிருந்து, கொடி விளக்கு உள்ளிட்ட கவிதைத்தொகுப்புகளைப் படைத்துள்ளார். இவர் பாண்டிச்சேரி ஆரோவில்லில் வாழ்ந்து வருகிறார்; ஆசிரியப்பணியிலும் கிராம மேம்பாட்டிலும் ஈடுபாடு கொண்டவர். 'கொடி விளக்கு' என்னும் நூலிலிருந்து இக்கவிதை எடுத்தாளப்பட்டுள்ளது.

திணை : பாலை துறை : மகள் நிலை உரைத்தல்

கூற்று : தலைவி இல்லறம் ஆற்றும் செவ்வியைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறியது.

**கூற்று விளக்கம்:** திருமணம் முடிந்து கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்றுவந்த செவிலி, நற்றாயிடம் மகள் வறுமையிலும் செம்மையாக வாழ்வதைச் சொல்லி, இத்தகைய இல்லற அறிவை எப்படிப் பெற்றாள் என வியந்து கூறுதல்.

**துறை விளக்கம்:** "மகள் நிலை உரைத்தல்" என்பது தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது. இத்துறை "மனைமருட்சி" என்றும் கூறப்படும்.

**சொல்லும் பொருளும்**

பிரசம் – தேன்; புடைத்தல் – கோல்கொண்டு மிரட்டுதல்; கொழுநன் குடி – கணவனுடைய வீடு; வறன் – வறுமை; கொழுஞ்சோறு – பெருஞ்செல்வம்; உள்ளாள் – நினையாள்; மதுகை – பெருமிதம்.

## பகுபத உறுப்பிலக்கணம்

**மெலிந்து – மெலி + த்(ந்) + த் + உ**

மெலி – பகுதி; த் – சந்தி, ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

**மறுத்து – மறு + த் + த் + உ**

மறு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

சிறுகோல் – சிறுமை + கோல்

ஈறு போதல் – சிறுகோல்

பொற்சிலம்பு – பொன் + சிலம்பு

ணன வல்லினம் வர ட ற வும் – பொன்சிலம்பு.

நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவதாகும்; 'நல்ல திணை' என்ற அடைமொழியால் போற்றப்படும் சிறப்பினை உடையது. இது, நானூறு பாடல்களைக் கொண்டது. 9 அடிகளைச் சிற்றெல்லையாகவும் 12 அடிகளைப் பேரெல்லையாகவும் கொண்டது. நற்றிணையைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. இதன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். போதனார்: சங்ககாலப் புலவர். நற்றிணையில் 110ஆம் பாடலை மட்டும் பாடியுள்ளார். நற்றிணையின் பேரெல்லை 12 அடி.விதிவிலக்காக 13 அடிகளைக் கொண்டதாக இவரது பாடல் அமைந்துள்ளது.

**அறிந்து – அறி + த்(ந்) + த் + உ**

அறி – பகுதி. த் – சந்தி, ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

இழுக்கின்றி – இழுக்கு + இன்றி

உயிர் வரின் உக்குறள் மெய் விட்டோடும் – இழுக்க் + இன்றி

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – இழுக்கின்றி.

**முறையறிந்து – முறை + அறிந்து**

இ ஈ ஐ வழி யவ்வும் – முறை + ய் + அறிந்து

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – முறையறிந்து.

## உள்ளுறை உவமம்

கவிஞர் தான் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல், அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவதை உள்ளுறை உவமம் (உவமை) என்பர்.

**உள்ளுறை**

வினை, பயன் போன்ற அடிப்படைகளில் தோன்றும்.

குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்.

## இயல் ஐந்து

### குறுவினா

1. நெருங்கின, இரங்கி - உறுப்பிலக்கணம் தருக.
2. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
3. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.
4. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

**சிறுவினா**

1. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.
2. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" - உவமையைப் பொருளுடன் விளக்குக.
3. இளைதாக முள்மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

**நெடுவினா**

1. மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
2. வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரை யாக்குக.

**கலைச் சொல் அறிவோம்:**

ஆவணம் - Document    உப்பங்கழி - Backwater
ஒப்பந்தம் - Agreement    படையெடுப்பு - Invasion
பண்பாடு - Culture,    மாலுமி - Sailor

## திருக்குறள்

### குறிப்பறிதல்

1.குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

### பகைத்திறம் தெளிதல்

1. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை
2. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

(பிறிதுமொழிதல் அணி)

### மருந்து

1. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்
2. நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

சொற்பொருள் பின்வரும் நிலையணி

### இரவச்சம்

1. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு

ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்படுகிறார்.

**ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ. வே. சா.**

தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.

**ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சில**

1. ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன்
3. வானம் வசப்படும் – பிரபஞ்சன்

### பகுபத உறுப்பிலக்கணம்

மலிந்த – மலி + த்(ந்) + த் + அ
மலி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

### புணர்ச்சி விதி

அரும்பொருள் – அருமை + பொருள்
ஈறு போதல் – அரு + பொருள்
இனமிகல் – அரும்பொருள்.

மனையென – மனை + என
இ ஈ ஐ வழி யவ்வும் – மனை + ய் + என
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – மனையென.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

பொன்னகர் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை;

மாநகர், உறுபகை – உரிச்சொல் தொடர்கள்;

தானமும் ஒழுக்கமும், தவமும் ஈகையும் – எண்ணும்மைகள்

இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மையானதாக விளங்குவது சீறாப்புராணம். 'சீறா' என்பது சீறத் என்னும் அரபுச் சொல்லின் திரிபு ஆகும். இதற்கு 'வாழ்க்கை' என்பது பொருள். புராணம் – வரலாறு. நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் இந்நூலை வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கு இணங்க உமறுப்புலவர் இயற்றினார் என்பர். இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக்காண்டம், ஹிஜிறத்துக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் 92 படலங்களையும் 5027 விருத்தப் பாடல்களையும் கொண்டது. நூலை முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்திய காரணத்தால் 'பனி அகமது மரைக்காயர்' இதன் தொடர்ச்சியாக சின்னச்சீறா என்ற நூலைப் படைத்துள்ளார். உமறுப்புலவர் எட்டயபுரத்தின் அரசவைப் புலவர். கடிகை முத்துப் புலவரின் மாணவர். நபிகள் நாயகத்தின் மீது முதுமொழிமாலை என்ற நூலையும் இயற்றியுள்ளார். வள்ளல் சீதக்காதி, அபுல்காசிம் மரைக்காயர் ஆகியோர் இவரை ஆதரித்தனர்.

**திணை :** குறிஞ்சி

**துறை:** இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

அகநானூறு 145 புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு. இது, களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு நெடுந்தொகை நானூறு என்ற பெயரும் உண்டு. இந்நூலின் தொகுப்பு முறையில் ஓர் ஒழுங்கு உண்டு. வீரை வெளியன் தித்தனார் பாடிய ஒரேயொரு பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

| திணை | பாடல் வரிசை | எண்ணிக்கை |
|---|---|---|
| பாலை | 1, 3, 5, 7... | 200 |
| குறிஞ்சி | 2, 8, 12, 18... | 80 |
| முல்லை | 4, 14, 24, 34... | 40 |
| மருதம் | 6, 16, 26, 36... | 40 |
| நெய்தல் | 10, 20, 30, 40... | 40 |

முதற்பொருளும் உரிப்பொருளும்

| திணை | நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த நிலமும் | கூதிர், முன்பனி | யாமம் | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் | கார் | மாலை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | வைகறை | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | எற்பாடு | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த நிலமும் | இளவேனில் முதுவேனில் | நண்பகல் | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

புதுச்சேரியைச் சேர்ந்த பிரபஞ்சனின் இயற்பெயர் வைத்தியலிங்கம். இவர் சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை என்று இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் இயங்கி வருபவர். 1995இல் இவருடைய வரலாற்றுப் புதினமான 'வானம் வசப்படும்' சாகித்திய அகாதெமி விருது பெற்றது. இவருடைய படைப்புகள் தெலுங்கு, கன்னடம், இந்தி, பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்**

- அகவலோசை கொண்டது.
- எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் (அளவடி) பெற்றுவரும்.
- இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.

**தமிழாக்கம் தருக.**

*The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and over again!*

## இயல் ஆறு

### குறுவினா

1. அயர்ந்து, எழுந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
2. தொடர் அமைத்து எழுதுக - **அன்றொருநாள், நிழலிலிருந்து**
3. ஒலோகமாதே வீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

### சிறுவினா

1. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?
2. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை ?

### நெடுவினா

1. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்த மிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

### கலைச் சொல் அறிவோம்

நுண் கலைகள் - Fine Arts

ஆவணப்படம் - Documentary

கல்வெட்டு - Inscription / Epigraph

தானியக்கிடங்கு - Grain Warehouse

பேரழிவு - Disaster

தொன்மம் - Myth

**மருதம் அகாடமி Youtube channel**

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

பெரியகோவிலின் கோபுரங்களில் உயரமானது, கேரளாந்தகன் கோபுரம். இராசராசன் 988ஆம் ஆண்டு சேரநாட்டை வெற்றிகொண்டதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்குக் "கேரளாந்தகன் வாயில் கோபுரம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

11ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோவிலை 1003ஆம் ஆண்டு தொடங்கி 1010ஆம் ஆண்டுவரை கட்டினான். 2010இல் இக்கோவிலின் 1000ஆவது ஆண்டு நிறைவடைந்தது.

கட்டடக்கலை என்பது உறைந்துபோன இசை
– பிரடிரிகா வொன்ஸ்லீவிங்

பெரியவர் : 1930ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த எஸ். கே. கோவிந்தசாமி தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகைப் பகுதிச்சுவர்களில் ஓவியங்கள் காணப்பட்டதை முதன்முதலில் கண்டறிந்தார். அதில்,

ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்

ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள். சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது. இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களிலும் காணலாம்.

"உடன் கூட்டத்து அதிகாரம் செய்கின்ற
கோவலூரு டையான் காடந்
னூற்றெண்மறையும் அதிகாரிச்சி
எருதந் குஞ்சிர மல்லியையும்"

என்ற வரிகளில் 'எருதந் குஞ்சிர மல்லி' என்ற பெண் அதிகாரியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுசூதனன் என்ற இயற்பெயரைக்கொண்ட ஆத்மாநாம் தமிழ்க்கவிதை ஆளுமைகளில் குறிப்பிடத்தக்கவர். காகிதத்தில் ஒரு கோடு அவருடைய முக்கியமான கவிதைத் தொகுப்பு. 'ழ' என்னும் சிற்றிதழை நடத்தியவர். கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என்று மூன்று தளங்களிலும் இயங்கியவர். இவருடைய கவிதைகள் ஆத்மாநாம் கவிதைகள் என்னும் பெயரில் ஒரே தொகுப்பாக்கப்பெற்றுள்ளன.

**இலக்கணக்குறிப்பு**

மாண்ட தவளை – பெயரெச்சம்.

**பகுபத உறுப்பிலக்கணம்**

பெற்ற – பெறு (பெற்று) + அ

பெறு – பகுதி

பெற்று – ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது

அ – பெயரெச்ச விகுதி.

**புணர்ச்சி விதி**

பயமில்லை – பயம் + இல்லை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – பயமில்லை.

Activate Wi
Go to Settings

தமிழ்நாட்டின் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து, அங்குள்ள குற்றாலநாதரைப் போற்றிப் பாடப்பட்டது குற்றாலக் குறவஞ்சி. இந்நூல், திரிகூட ராசப்பக் கவிராயரின் 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்பட்டது. மதுரை முத்துவிசயரங்க சொக்கலிங்கனார் விருப்பத்திற்கு இணங்கப் பாடி அரங்கேற்றப்பட்டது. திரிகூட ராசப்பக் கவிராயர் திருநெல்வேலியில் தோன்றியவர். குற்றாலநாதர் கோவிலில் பணிபுரியும் காலத்தில் சைவசமயக் கல்வியிலும் இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றார். 'திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான்' என்று சிறப்புப் பட்டப்பெயர் பெற்றவர். குற்றாலத்தின்மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியிருக்கின்றார்.

**இலக்கணக்குறிப்பு**

சுடுகாடு, கொல்புலி, குரைகடல் – வினைத்தொகைகள்;
நல்லாடை – பண்புத்தொகை.

**உறுப்பிலக்கணம்**

உண்டான் – உண் + ட் + ஆன்

உண் – பகுதி, ட் – இறந்தகால இடைநிலை

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

**உலகனைத்தும் – உலகு + அனைத்தும்**

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும், உலக் + அனைத்தும்

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே உலகனைத்தும்

**திருவடி – திரு + அடி**

ஏனை உயிர்வழி வவ்வும், திரு + வ் + அடி

உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே திருவடி.

திருவாசகம் என்பது சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும். இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர். இது சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது. திருவாசகத்தில் 51 திருப்பதிகங்கள் உள்ளன. இவற்றுள் மொத்தம் 658 பாடல்கள் அடங்கியுள்ளன. இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப் பெற்றுள்ளன. பக்திச் சுவையும் மனத்தை உருக்கும் தன்மையும் கொண்டவை திருவாசகப் பாடல்கள். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது முதுமொழி. திருச்சாழல் தில்லைக் கோவிலில் பாடப்பெற்றது. ஜி.யு. போப் திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர். திருவாதவூரைச் சேர்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார். மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் திருவாசகம், திருக்கோவையார் ஆகியனவாகும்.

மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு ஆரட்டோரியோ (Oratorio) என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார். 'இராஜாவின் ரமணமாலை', 'இளையராஜாவின் கீதாஞ்சலி' என்னும் தமிழ் இசைத்தொகுப்புகளையும் கன்னட மொழியில் 'மூகாம்பிகை' என்ற பக்தி இசைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்ற பக்திப்பாடலுக்கும் இசையமைத்துள்ளார். பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.

தேவாரத்தில் 23 பண்களில் பாடல்கள் உள்ளன. தேவாரத்தில் இல்லாது நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் மட்டும் காணப்படும் பண்கள்: நைவளம், அந்தாளி, தோடி, கல்வாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம் ஆகியவை. சாளரபாணி என்ற பண் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படுகிறது.

பிங்கல நிகண்டு என்னும் நூலில் 103 பண்கள் காணப்படுகின்றன. பண்கள், பாடும் காலங்களுக்கு ஏற்றவாறு பகல் பண், இரவுப் பண், பொதுப் பண் என்று வகுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பழந்தமிழிலக்கியச் சொல்லைப் பயன்படுத்துதல் | வலவன் (PILOT) |
| பேச்சுமொழிச் சொல்லைப் பயன்படுத்துதல் | அம்மை (MEASLES) |
| பிறமொழிச் சொல்லினைக் கடன்பெறல் | தசம முறை (Decimal) |
| புதுச்சொல் படைத்தல் | மூலக்கூறு (Molecule) |
| உலக வழக்கை ஏற்றுக் கொள்ளல் | எக்ஸ் கதிர் (X–ray) |
| பிறமொழித்துறைச் சொற்களை மொழி பெயர்த்தல் | ஒளிச்சேர்க்கை (Photosynthesis) |
| ஒலிபெயர்த்துப் பயன்படுத்தும் சொற்கள் | மீட்டர், ஓம் (Meter, Ohm) |
| உலக அளவிலான குறியீடுகள், சூத்திரங்கள் | $\Sigma$ $\sqrt{A} = \pi r^2$ $H_2O$, Ca |

**தமிழாக்கம் தருக.**

*The oldest documented forms of art are visual arts, which include creation of images or objects in fields including today painting, sculpture, printmaking, photography, and other visual media. Music, theatre, film, dance, and other performing arts, as well as literature and other media such as interactive media, are included in a broader definition of art or the arts. Until the 17th century, art referred to any skill or mastery and was not differentiated from crafts or sciences. Art has had a great number of different functions throughout its history, making its purpose difficult to abstract or quantify to any single concept. This does not imply that the purpose of Art is "vague", but that it has had many unique, different reasons for being created.*

## இயல் ஏழு

### புரட்சிக்கவி -பாரதிதாசன்

சிற்றூரும் வரப்பெ டுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலை பிளந்து கனிகள் வெ ட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை ?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

பா வகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**மருதம் அகாடமி** Youtube channel

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

**குறுவினா**

1. செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் எழுதுக.
2. அலைகடல், புதுக்கியவர் – இலக்கணக் குறிப்புத் தருக.
3. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை ?

**சிறுவினா**

1. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்த ரராமசாமி கூறுவன யாவை?
2. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன - ஏன்
3. பெருங்காடு, உழுதுழுது - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக?

**நெடுவினா**

1. பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க

**கலைச் சொல் அறிவோம்**

உத்திகள் - Strategies, சமத்துவம் - Equality,
தொழிற்சங்கம் - Trade Union
பட்டிமன்றம் - Debate,
பன்முக ஆளுமை - Multiple Personality,
புனைபெயர் - Pseudonym

ஜீவா என்றழைக்கப்படும் ப. ஜீவானந்தம் தொடக்கத்தில் காந்தியவாதியாகவும் பிறகு சுயமரியாதை இயக்கப் போராளியாகவும் hp பாதுவுடைமை இயக்கத் தலைவராகவும் செயல்பட்டார்; சிறந்த தமிழ்ப் பற்றாளர்; எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்தவர்.

நாகர்கோவிலைச் சேர்ந்த சுந்தர ராமசாமி, நவீனத் தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். பசுவய்யா என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர். ரத்னாபாயின் ஆங்கிலம், காகங்கள் உள்ளிட்ட சிறுகதைகளை எழுதியிருப்பதுடன் ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள் ஆகிய புதினங்களையும் எழுதியுள்ளார். செம்மீன், தோட்டியின் மகன் ஆகிய புதினங்களை மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். பாடப்பகுதியாக உள்ள இக்கட்டுரை 1963இல் தாமரை இதழின் ஜீவா பற்றிய சிறப்புமலரில் வெளியானது.

**பகுபத உறுப்பிலக்கணம்**

நின்றார் – நில்(ன்) + ற் + ஆர்

நில் – பகுதி ('ல்' 'ன்' ஆனது விகாரம்), ற் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

அழைத்தான் – அழை + த் + த் + ஆன்

அழை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

வேண்டுகின்றேன் – வேண்டு + கின்று + ஏன்

வேண்டு – பகுதி, கின்று –நிகழ்கால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

**புணர்ச்சி விதி**

நீரோடை – நீர் + ஓடை

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – நீரோடை

சிற்றூர் – சிறுமை+ ஊர், ஈறு போதல் சிறு + ஊர்

தன்னொற்றிரட்டல் – சிற்று + ஊர்

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் – சிற்ற் + ஊர்

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – சிற்றூர்

கற்பிளந்து – கல் + பிளந்து

ல ள வேற்றுமையில் வலிவரின் றடவும் – கற்பிளந்து

**தமிழிலிருந்து பிற மொழிக்கு**

சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு

ஏ.கே.ராமானுஜம் – Love Poems from a Classical Tamil Anthology

ம.லெ. தங்கப்பா – Hues And Harmonies From An Ancient Land

வடமொழியில் எழுதப்பட்ட பில்கணீயம் என்னும் காவியத்தைத் தழுவி, தமிழில் பாரதிதாசனால் 1937இல் எழுதப்பட்டது புரட்சிக்கவி. பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாகக் கனக சுப்புரத்தினம் என்னும் தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார். மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றித் தம் பாடல்களில் உரக்க வெளிப்படுத்தியமையால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார். பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் நலச் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தவர். குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, சேர தாண்டவம், ஆகிய காப்பியங்களையும் எண்ணற்ற பாடல்களையும் இயற்றியவர். 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தியுள்ளார். இவருடைய 'பிசிராந்தையார்' நாடகத்துக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற இவரின் தமிழ் வாழ்த்துப் பாடலைப் புதுவை அரசு தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழக அரசு இவருடைய பெயரால் திருச்சியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளது.

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

**திணை : பாடாண்திணை**

பாடாண் திணையானது ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவதாகும். பாடப்படும் ஆண்மகனின் உயர்பண்புகளைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

**துறை: செந்துறைப் பாடாண்பாட்டு**

செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்.

**தூக்கு: செந்தூக்கு**

தூக்கு என்பது செய்யுள் அடிகளை வரையறை செய்வதாகும். செந்தூக்கு என்பது வஞ்சிப்பாவின் இறுதியடி போன்றோ, ஆசிரியவடியின் இறுதி போன்றோ அமையும்.

> வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.
>
> தொல் . பொ. 383

**பகுபத உறுப்பிலக்கணம்**

மருண்டனென் – மருள்(ண்) + ட் + அன் + என்

மருள் – பகுதி, 'ள்' 'ண்' ஆனது விகாரம்

ட் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை

என் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

துய்த்தல் – துய் + த் + தல்

துய் – பகுதி, த் – சந்தி, தல் – தொழிற்பெயர் விகுதி

**புணர்ச்சி விதி**

மண்ணுடை – மண் + உடை

தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் – மண்ண் + உடை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – மண்ணுடை

புறந்தருதல் – புறம் + தருதல்

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் – புறந்தருதல்.

பட்டிமன்றம் ஒரு சுவையான விவாதக்களம். அது தமிழில் பழங்காலம் தொட்டே அறிமுகமான அறிவார்ந்த பேச்சுக்கலை வடிவம். வாழ்வியல் சிந்தனைகளை மக்கள் முன்பு வலிமையாக வைக்கும் வாதுரை அரங்கம். "பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்" என்று மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகின்றது.

**தமிழில் ஆக்கப்பெயர் விகுதிகள்**

காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர், மானம்

**இலக்கியநயம் பாராட்டுக.**

*சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்*
*சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?*
*பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்*
*பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?*
*இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்*
*எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்*
*நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட*
*நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.*

– நாமக்கல் கவிஞர்.

மருதம் அகாடமி Youtube channel
தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789
Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## இயல் எட்டு

## தொலைந்து போனவர்கள்

- அப்துல் ரகுமான்

உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் - உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் - பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

'நான்' என்பாய் அது நீயில்லை - வெறும்
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை - அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

**பா வகை : சிந்து**

### குறுவினா

1. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள் - இவ்வடி எதனைக்குறிப்பிடுகிறது?
2. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக்கேட்கிறார்?

### சிறுவினா

1. தாமஸிகம் என்றால் என்ன?
2. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்துவரிகளில் எழுதுக.

### நெடுவினா

1. நர்த்தகி நடராஜின் நேர்ககாணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

### கலைச் சொல் அறிவோம்

நாங்கூழ்ப் புழு - Earthworm
விழிப்புணர்வு - Awareness
உலகமயமாக்கல் - Globalisation
கடவுச்சீட்டு - Passport
முனைவர் பட்டம் - Doctor of Philosophy (Ph.D.)

### பகுபத உறுப்பிலக்கணம்

**முளைத்த – முளை + த் + த் + அ**

முளை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

**ஏகுமின் – ஏகு + மின்**

ஏகு – பகுதி, மின் – ஏவல் வினைமுற்று விகுதி.

தமிழ் நாடக இலக்கண நூல்கள் சில

| | |
|---|---|
| 1. அகத்தியம் | 6. செயன்முறை |
| 2. குணநூல் | 7. செயிற்றியம் |
| 3. கூத்தநூல் | 8. முறுவல் |
| 4. சந்தம் | 9. மதிவாணனார் நாடகத் தமிழ் நூல் |
| 5. சயந்தம் | 10. நாடகவியல் |

**விடுத்தனை – விடு + த் + த் + அன் + ஐ**

விடு – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, ஐ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

**உழுதுழுது – உழுது + உழுது**

உயிர் வரின் உக்குறள் மெய் விட்டோடும் உழுத் + உழுது

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – உழுதுழுது.

**பேரழகு – பெருமை + அழகு**

ஈறு போதல் – பெரு + அழகு

ஆதி நீடல் – பேரு + அழகு

இனையவும் – பேர் + அழகு (உகரம் கெட்டது)

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – பேரழகு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

மனோன்மணீயம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூல். லிட்டன் பிரபு எழுதிய 'இரகசிய வழி' (The Secret Way) என்ற நூலைத் தழுவி 1891இல் பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதியுள்ளார். இஃது எளிய நடையில் ஆசிரியப்பாவால் அமைந்தது. இந்நூல் ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் கொண்டது. நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம் பெற்றுள்ளது. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை 'சிவகாமியின் சரிதம்'.

பேராசிரியர் சுந்தரனார் திருவிதாங்கூரில் உள்ள ஆலப்புழையில் 1855இல் பிறந்தார். திருவனந்தபுரம் அரசுக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றி உள்ளார். சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக அரசு, இவர் பெயரால் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியுள்ளது.

தமிழாக்கம் தருக.

*An eye for an eye only ends up making the whole world blind.*

*You must be the change you wish to see in the world.*

*The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.*

*Nobody can hurt me without my permission.*

*You must not lose faith in humanity. Humanity is an ocean; if a few drops of the ocean are dirty, the ocean does not become dirty.*

*- Mahathma Gandhi*

சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள தாகூரின் கடிதங்கள் என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் த.நா. குமாரசுவாமி. அவர் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, வங்கம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். வங்க அரசு, தமிழ்–வங்க மொழிகளுக்கு அவர் ஆற்றிய தொண்டைப் பாராட்டி 'நேதாஜி இலக்கிய விருது' அளித்துச் சிறப்பித்துள்ளது.

தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு 1921இல் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார். 'குருதேவ்' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் தாகூரின் 'ஜனகணமன' என்னும் பாடல் இந்தியாவின் நாட்டுப் பண்ணாகவும் 'அமர் சோனார் பங்களா' என்னும் பாடல் வங்காள தேசத்தின் நாட்டுப் பண்ணாகவும் இன்றும் பாடப்பட்டு வருகின்றன.

### பகுபத உறுப்பிலக்கணம்

**வென்றேன் – வெல்(ன்) + ற்+ஏன்**

வெல் – பகுதி (ல், ன் எனத் திரிந்தது விகாரம்)

ற் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**நிற்கின்றாய் – நில்(ற்)+ கின்று+ ஆய்**

நில் – பகுதி (ல், ற் எனத் திரிந்தது விகாரம்)

கின்று – நிகழ்கால இடைநிலை

ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

அப்துல் ரகுமான் புதுக்கவிதை, வசனகவிதை, மரபுக்கவிதை என்று கவிதைகளின் பல வடிவங்களிலும் எழுதியுள்ளார். வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவர். பால்வீதி, நேயர்விருப்பம், பித்தன், ஆலாபனை முதலான பல நூல்களை எழுதியுள்ளார். பாரதிதாசன் விருது, தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருது, ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதெமி விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார். இப்பாடல் 'சுட்டுவிரல்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

## அணி இலக்கணம்

1. உருவக அணியை சான்றுடன் விளக்குக
2. வேற்றுமை அணியை சான்றுடன் விளக்குக
3. உவமை அணி
4. சொல் பின்வரும் நிலையணி
5. பிறிது மொழிதல் அணி

## சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க

**(எ.கா.) கால்நடை**

கால்நடைகளை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக் கொண்டு போனார்கள். சிறிய தொலைவைக் கடக்கக் கால் நடையாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.

| | |
|---|---|
| 1. பிண்ணாக்கு<br>பிள்நாக்கு | 2. எட்டுவரை<br>எள்துவரை |
| 3. அறிவில்லா தவன்<br>அறிவில் ஆதவன் | 4. தங்கை<br>தம் கை |
| 5. வைகை<br>வை கை | 6. நஞ்சிருக்கும்<br>நஞ்சு இருக்கும் |

**கண்காணி: பேச்சு வழக்கில் கங்காணி என்று பயன்படுத்தப்படுகிறது. கண்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல். கங்காணம் என்றும் வழங்கப்படுகிறது.**

1. மார்ச் 20 - உலகச் சிட்டுக்குருவிகள் நாள்.
2. கண்காணி: பேச்சு வழக்கில் கங்காணி என்று பயன்படுத்தப்படுகிறது. கண்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல். கங்காணம் என்றும் வழங்கப்படுகிறது.
3. **உயர்ந்தோங்கும் - உயர்ந்து + ஓங்கும்**
   உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் உயர்ந்த் + ஓங்கும்.
   உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே உயர்ந்தோங்கும்.
4. பொதுவியல் திணை
5. பொருண்மொழிக் காஞ்சித் துறை

6. பகுபத உறுப்புகள் எத்தனை ? அவை யாவை ?

7. **அரும்பொருள் - அருமை + பொருள்**
ஈறு போதல் - அரு + பொருள்
இனமிகல் - அரும்பொருள்.

8. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை?

9. குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள் யாது கொடுத்தும் **கொளல்**.

10. இளைதாக முள்மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த **இடத்து**.

11. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்.

12. **பயமில்லை - பயம் + இல்லை**
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - பயமில்லை .

13. **உலகனைத்தும் - உலகு + அனைத்தும்**
உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்,
உலக் + அனை த்தும்
உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
உலகனைத்தும்

14. பாரதிதாசன் குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தியுள்ளார். இவருடைய 'பிசிராந்தையார்' நாடகத்துக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

15. "பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்" என்று மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகின்றது.

16. அப்துல் ரகுமான் பாரதிதாசன் விருது, தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் தமிழன்னை விருது, ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதெமி விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

17. முல்லை திணை

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்**

- அகவலோசை கொண்டது.
- எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் (அளவடி) பெற்றுவரும்.
- இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.

**நர்த்தகி நடராஜ் பெற்ற விருதுகள்**

தமிழக அரசின் கலைமாமணி விருது, இந்திய அரசின் சங்கீத நாடக அகாதெமி விருது, இந்திய அரசுத் தொலைக்காட்சியின் ஏ கிரேடு கலைஞர், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் சிறந்த கலைஞர், தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம்.

மருதம் அகாடமி YouTube Channel 9659838789

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

.

மருதம் அகாடமி YouTube Channel 9659838789